# தொழிலாளர் நீதிமன்றம், சேலம்.

முன்னிலை : திருமதி. S. சுமதி, எம்.எல்.,
தொழிலாளர் நீதிபதி,
தொழிலாளர் நீதிமன்றம், சேலம்.

2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 06 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**தொழிற்தகராறு எண். 47/2019**

**CNR.NO. TNSA020001022019**

T. மணிகண்டன் (வயது 33),
த/பெ. P. தியாகராஜன்,
எண்.8/73, நெசவாளர் கூட்டுறவு சங்க தெரு,
வெண்ணந்தூர்,
நாமக்கல் மாவட்டம். ..... மனுதாரர்

//எதிராக//

1. செயல் அலுவலர்,
வெண்ணந்தூர் பேரூராட்சி,
நாமக்கல் மாவட்டம்–637505.

2.பேரூராட்சிகளின் உதவி இயக்குனர்,
சேலம் மாவட்ட ஆட்சியர் வளாகம்,
சேலம்–1 ..... எதிர்மனுதாரர்கள்

இம்மனு 25.08.2022ம் தேதியில் என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. நியூட்டன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்களை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு சாட்சியம் மற்றும் வாதுரையை கேட்டும், ஆவணங்களை பரிசீலினை செய்தும், ஆய்விலிருந்துவந்த இம்மனு மீது இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்;

## தீர்வம்

மனுதாரர் இம்மனுவினை 1947–ஆம் வருட தொழிற் தகராறுகள் சட்டப்பிரிவு 2A(2) ன் கீழ் மனுதாரருக்கு பணி வழங்க மறுத்த 26.08.2018ம் தேதி முதல் பணித்தொடர்ச்சியுடன் மீண்டும் வேலையும், பணி மறுக்கப்பட்ட காலத்திற்கு முழு பின் சம்பளமும் வழங்க எதிர்மனுதாரர்கள் நிர்வாகத்திற்கு உத்தரவிட கோரி தாக்கல் செய்துள்ளார்.

2) <u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம் பின்வருமாறு:</u>

மனுதாரர் எதிர்மனுதாரரின் வெண்ணந்தூர் பேரூராட்சியில் கடந்த 11.07.2012 ம் தேதி முதல் எலக்ட்ரிசியனாக தொடர்ந்து 7 வருடங்களுக்கும் மேலாக பணி செய்துள்ளார். மனுதாரரின் பணி காலத்தில் நல்ல முறையில் சுமார் 800 தெரு விளக்குகள் பணியைப் பார்த்து வந்தார். மனுதாரருக்கு எதிர்மனுதாரர் மார்கெட் ரேட் சம்பளம் என்று இறுதியாக மாதம் ரூ.9900/— வழங்கி வந்துள்ளது. இந்த சம்பளம் குறைந்தபட்ச சம்பளத்திற்கும் குறைவானதாகும். மனுதாரர் கடந்த 23.08.2018 ம் தேதி அவருடைய திருமணத்திற்காக செயல் அலுவலரின் அனுமதியுடன் விடுப்பில் சென்றுவிட்டு, 26.08.2018 ம் தேதி மீண்டும் பணிக்கு வந்தபோது 1 ம் எதிர்மனுதாரர் மனுதாரரை கண்டபடி திட்டி, வேலைக்கு வரவேண்டாம் என்று வாய்மொழியாக பணி நீக்கம் செய்துள்ளார். மனுதாரர் பலமுறை நேரில் சென்று வேலை கேட்டும், 1 ம் எதிர்மனுதாரர் வேலை கொடுக்க மறுத்துவிட்டது, மேலும் வேறு ஒருவரை அப்பணிக்கு அமர்த்திவிட்டதாகவும் கூறியுள்ளது. கடந்த 31.08.2018 ம் தேதி மனுதாரர் பதிவு அஞ்சல் மூலம் 1 ம் எதிர்மனுதாரருக்கு கடிதம் அனுப்பி வேலை கேட்டும் மனுதாரருக்கு பணி வழங்கப்படவில்லை. மேற்படி பதிவு அஞ்சலை 2 ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பியும் எவ்விதமான பதிலும் அளிக்கப்படவில்லை. 1 ம் எதிர்மனுதாரர் மனுதாரரை வாய்மொழியாக பணிநீக்கம் செய்வதற்கு முன்பாக எந்தவித சட்ட விதிகளையும் பின்பற்றாமல் தன்னிச்சையாக செயல்பட்டுள்ளார். மனுதாரர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்படவில்லை, குடும்ப விசாரணை நடத்தப்படவில்லை, காரணம் கோரும் அறிவிப்பு கொடுக்கப்படவில்லை. எந்தவித சட்ட விதிமுறைகளையும் பின் பற்றாமல் மனுதாரரை வாய்மொழியாக பணி நீக்கம் செய்துவிட்டு, அந்த இடத்திற்கு வேறு ஒருவரை நேரடியாக பணிக்கு சேர்த்தது சட்டத்திற்கும், இயற்கை நீதிக்கும் எதிரானதாகும். இது சம்மந்தமாக மனுதாரர் சேலம் தொழிலாளர் அலுவலர் முன்பு ந.க.எண்.542/2018 என்ற எண்ணில் தாவா தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் 1 ம் எதிர்மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகததால், சேலம் தொழிலாளர் அலுவலர் 02.01.2019 அன்று சமரச முறிவறிக்கை வழங்கியுள்ளார். மனுதாரருக்கு திருமணம் நடந்த சில தினங்களிலே அவரது பணி பறிக்கப்பட்ட நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார். அதனால் அவரது குடும்பம் மிகுந்த கஷ்டத்திற்கு நஷ்டத்திற்கும் உள்ளாகியுள்ளது.

எதிர்மனுதாரர் நிர்வாகம் சேலம் தொழிலாளர் அலுவலகத்தில் கொடுத்த பதிலுரையில் மனுதாரர் திருமணத்திற்காக விடுப்பில் சென்ற நாளில் அமைச்சர்கள் வருகின்றபோது பணிக்கு வரவில்லையென்று பொய்யான காரணத்தை கூறியுள்ளது, அதற்கு மனுதாரர் தனது தரப்பு ஆட்சேபனையை தெரிவித்துள்ளார். மனுதாரரை பணி நீக்கம் செய்துவிட்டு, அடுத்த நாளே வேறொரு நபரை அந்த இடத்தில் பணியமர்த்தியுள்ளது ஆதாய நோக்கத்தோடு மனுதாரர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. எனவே மனுதாரருக்கு மீண்டும் பின் தொடர்ச்சியுடன் வேலையும், வேலை மறுக்கப்பட்ட காலத்திற்கு முழு பின் சம்பளமும் வழங்க வேண்டும்.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில்

i). மனுதாரருக்கு எதிரான 26.08.2018 ஆம் தேதிய எதிர்மனுதாரரின் வாய்மொழியான பணி நீக்க உத்தரவு சட்டத்திற்கும் இயற்கை நீதிக்கும் எதிரானதா? அதை ரத்து செய்யப்பட வேண்டுமா?

ii). ஆம் எனில், மனுவில் கோரியுள்ளவாறு பின்சம்பளம் மற்றும் பணித்தொடர்ச்சியுடன் மீண்டும் பணியமர்த்த மனுதாரர் அருகதையுடையவரா?

பிரச்சனைகள் 1 மற்றும் 2

5) இம்மனுவில் மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6) அறிவார்ந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் மனுதாரர் எதிர்மனுதாரரின் வெண்ணந்தூர் பேரூராட்சியில் கடந்த 11.07.2012 ம் தேதி முதல் எலக்ட்ரிசியனாக தொடர்ந்து 7 வருடங்களுக்கும் மேலாக பணி செய்துள்ளார் என்றும், மனுதாரர் இறுதியாக மாதம் ரூ.9900/- சம்பளம் பெற்று வந்தார் என்றும், இந்த சம்பளம் குறைந்தபட்ச சம்பளத்திற்கும் குறைவானது என்றும், மனுதாரர் கடந்த 23.08.2018 ம் தேதி அவருடைய திருமணத்திற்காக செயல் அலுவலரின் அனுமதியுடன் விடுப்பில் சென்றுவிட்டு, 26.08.2018 ம் தேதி மீண்டும் பணிக்கு வந்தபோது 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரை கண்டபடி திட்டி, வேலைக்கு வரவேண்டாம் என்று வாய்மொழியாக பணி நீக்கம் செய்துள்ளார் என்றும், மனுதாரர் பலமுறை நேரில் சென்று வேலை கேட்டும்,

1ம் எதிர்மனுதாரர் வேலை கொடுக்க மறுத்துவிட்டு, மறு நாளே வேறு ஒருவரை அப்பணிக்கு அமர்த்தியுள்ளார் என்றும், கடந்த 31.08.2018ம் தேதி மனுதாரர் பதிவு அஞ்சல் மூலம் 1ம் எதிர்மனுதாரருக்கு கடிதம் அனுப்பி வேலை கேட்டும் மனுதாரருக்கு பணி வழங்கப்படவில்லை என்றும், 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரை வாய்மொழியாக பணிநீக்கம் செய்வதற்கு முன்பாக எந்தவித சட்ட விதிகளையும் பின்பற்றாமல் தன்னிச்சையாக செயல்பட்டுள்ளார் என்றும், மனுதாரர் மீது எவ்வித குற்றச்சாட்டும் சுமத்தப்படவில்லை, குடும்ப விசாரணை நடத்தப்படவில்லை, காரணம் கோரும் அறிவிப்பு கொடுக்கப்படவில்லை என்றும், இது சம்மந்தமாக மனுதாரர் தனக்கு மீண்டும் பணி வழங்க கோரி சேலம் தொழிலாளர் அலுவலர் முன்பு ந.க.எண்.542/2018 என்ற எண்ணில் தாவா தொடர்ந்ததில் சமரசம் ஏற்படவில்லையென தெரிவித்து சேலம் தொழிலாளர் அலுவலர் 02.01.2019 அன்று சமரச முறிவறிக்கை வழங்கியுள்ளார் என்றும், எந்தவித சட்ட விதிமுறைகளையும் பின் பற்றாமல் மனுதாரரை வாய்மொழியாக பணி நீக்கம் செய்துவிட்டு, அந்த இடத்திற்கு வேறு ஒருவரை நேரடியாக பணிக்கு சேர்த்தது சட்டத்திற்கும், இயற்கை நீதிக்கும் எதிரானது என்றும், எனவே மனுதாரருக்கு மீண்டும் பின் தொடர்ச்சியுடன் வேலையும், வேலை மறுக்கப்பட்ட காலத்திற்கு முழு பின் சம்பளமும் வழங்க வேண்டுமென்றும் கூறினார்.

7) மனுதாரர் 1ம் எதிர்மனுதாரர் பேரூராட்சியில் 7 வருடங்களுக்கும் மேலாக எலக்ட்ரீசியன் பணி செய்து வந்ததாகவும், மேலும் மனுதாரர் கடைசியாக பெற்ற மாத சம்பளம் ரூ.9900/– மனுவில் கூறியுள்ளார். மேலும் 23.08.2018ம் தேதியில் மனுதாரரின் திருமணத்திற்காக விடுப்பு விண்ணப்பம் கொடுத்து, செயல் அலுவலரின் அனுமதியுடன் விடுப்பு எடுத்ததாகவும், திருமணம் முடிந்து 26.08.2018ம் தேதி பணிக்கு வந்தபோது 1ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் மனுதாரருக்கு பணி வழங்க மறுத்து வாய்மொழியாக பணிநீக்கம் செய்துவிட்டதாகவும் கூறியுள்ளார். மேலும் மனுதாரர் 31.08.2018ம் தேதியில் பதிவு தபால் மூலம் மீண்டும் தனக்கு பணி வழங்ககோரி மனுதாரர் கடிதம் கொடுத்ததாகவும், அதனை பெற்றுக்கொண்ட 1ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் மனுதாரருக்கு பணி எதுவும் வழங்கவில்லை என்றும் மனுவில் கூறப்பட்டுள்ளது. மேலும் 1ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் பணி வழங்க மறுத்தது தொடர்பாக, மனுதாரர் சேலம் தொழிலாளர் அலுவலர் முன்பாக ந.க.எண்.542/2018

என்ற எண்ணில் தொழிற்தாவா தாக்கல் செய்து, மனுதாரருக்கு மீண்டும் பணி வழங்க கோரியுள்ளார். அதில் சமரசம் ஏற்படாததால் சேலம் தொழிலாளர் அலுவலர் சமரச முறிவறிக்கை வழங்கியுள்ளார்.

8) மனுதாரரின் பாரத ஸ்டேட் வங்கியின் கணக்கு புத்தகம் ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.4 ன் ஆய்விலிருந்து மனுதாரர் 1ம் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் பணிபுரிந்துள்ளார் என்பதும், அவர் கடைசியாக ரூ.9900/— தொகையை மாத சம்பளமாக பெற்றுவந்துள்ளார் என்பதும் தெரியவருகிறது. மனுதாரரின் விடுப்பு விண்ணப்பம் ம.சா.ஆ.5 ஆகவும், மனுதாரரின் திருமண பத்திரிக்கை ம.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.6 ஆவணத்தின் ஆய்விலிருந்து மனுதாரருக்கு 23.08.2018 அன்று திருமணம் நடந்துள்ளது என்பதும், அதற்காக அவர் 1ம் எதிர்மனுதாரருக்கு ம.சா.ஆ.5 விடுப்பு விண்ணப்பம் கொடுத்துள்ளார் என்பதும் தெரியவருகிறது. மனுதாரர் தனக்கு மீண்டும் பணி வழங்ககோரி ம.சா.ஆ.1 கடிதத்தை 1ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பியதாகவும், அதனை 1ம் எதிர்மனுதாரர் பெற்றுக்கொண்ட பிறகும் எந்தவித பதிலோ, வேலையோ தரவில்லையென மனுவில் கூறியுள்ள கூற்று உண்மையென ம.சா.ஆ.1 ஆய்விலிருந்து தெரியவருகிறது.

9) மனுதாரரை வாய்மொழியாக பணி நீக்கம் செய்யப்பட்ட 26.08.2018 முதல் பின்சம்பளம் மற்றும் பணித்தொடர்ச்சியுடன் கூடிய வேலையை மீண்டும் வழங்கிட எதிர்மனுதாரருக்கு உத்தரவிடகோரி சேலம் தொழிலாளர் அலுவலர் முன்பாக ந.க.எண்.542/2018 என்ற எண்ணில் தொழிற்தாவா எழுப்பட்டு சமரச பேச்சு வார்த்தை நடந்துள்ளது. அதில் சமரசம் ஏற்படவில்லையென தெரிவித்து சேலம் தொழிலாளர் அலுவலர் ம.சா.ஆ.2 சமரச முறிவறிக்கையை வழங்கியுள்ளார். எனவே மனுதாரர் 1ம் எதிர்மனுதாரர் பேரூராட்சியில் 7 வருடங்களுக்கும் மேலாக பணிபுரிந்து வந்துள்ளார் என்பதும், 26.08.2018ம் தேதி முதல் மனுதாரர் எந்தவித முன்னறிவிப்புமின்றி வாய்மொழியாக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்பதும், மனுதாரர் தனக்கு மீண்டும் பணி வழங்க கோரி நேரிலும், கடிதம் மூலமாக கேட்டும், 1ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் பணி வழங்க மறுத்துள்ளது என்பதும் மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

10) இவ்வழக்கில் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு வழக்கு சம்பந்தமாக நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டு, அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகி பதிலுரை தாக்கல் செய்த பின்னர், வழக்கை தொடர்ந்து நடத்த முன்வராததால் தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளனர். மேலும் மனுதாரர் 1ம் எதிர்மனுதாரர் பேரூராட்சியில் தொழிலாளியாக பணி செய்யவில்லை என்றோ, அவரது கோரிக்கைகள் நியாயமற்றது என்றோ எதிர்மனுதாரர்கள் தரப்பில் எடுத்துரைக்கப்படவில்லை. எனவே மனுவில் கோரியுள்ளவாறு மனுதாரருக்கு மீண்டும் பணி வழங்குவதில் எதிர்மனுதாரர்களுக்கு ஆட்சேபணை ஏதும் இல்லை என்பது தெளிவாகிறது. மனுதாரரை பணி நீக்கம் செய்வதற்கு முன்பாக அவருக்கு குற்றச்சாட்டு குறிப்பாணையோ, காரணம் கோரும் அறிவிப்போ கொடுக்கப்படவில்லை, குடும்ப விசாரணை எதுவும் நடத்தப்படவில்லை. எந்தவித முன் அறிவிப்பும் கொடுக்காமலும், சட்ட விதிமுறைகளை பின்பற்றாமலும் மனுதாரரை வாய்மொழியாக பணி நீக்கம் செய்துள்ளது சட்டத்திற்கும் இயற்கை நீதிக்கும் எதிரானது என்று இந்நீதிமன்றம் கருதுவதால், மனுதாரர் மனுவில் கோரியுள்ளவாறு பரிகாரம் பெற அருகதையுடையவர் என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. அவ்வாறே எழுவினாக்களுக்கு தீர்வு காணப்படுகிறது.

11) இறுதியாக இம்மனு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. 1ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் மனுதாரருக்கு அவர் வாய்மொழியாக பணிநீக்கம் செய்யப்பட்ட 26.08.2018 ஆம் தேதி முதல் பணித்தொடர்ச்சியுடன் கூடிய வேலையும், பின் சம்பளமும் மற்றும் சட்டப்படியான இதர பணப்பலன்களையும் கணக்கிட்டு இன்றிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் வழங்கவேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 06–ஆம் நாளில் இவ்வவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம் / திருமதி. S.சுமதி)
தொழிலாளர் நீதிபதி,
தொழிலாளர் நீதிமன்றம், சேலம்.

அனுபந்தம்

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி –</u>**

ம.சா.1 21.10.2019 T. மணிகண்டன்

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி –</u>**

இல்லை

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் –</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 31.08.2018 | மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய கடிதம் |
| ம.சா.ஆ.2 | 02.01.2019 | சமரச முறிவறிக்கை |
| ம.சா.ஆ.3 | 27.06.2018 | நாமக்கல் மாவட்ட அரசிதழ் நகல் |
| ம.சா.ஆ.4 | 2013–2018 | மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் |
| ம.சா.ஆ.5 | 21.08.2018 | மனுதாரரின் விடுப்பு விண்ணப்பம் நகல் |
| ம.சா.ஆ.6 | 23.08.2018 | மனுதாரரின் திருமணப் பத்திரிக்கை |
| ம.சா.ஆ.7 | 01.02.2019 | வங்கிக்கு அனுப்பப்பட்ட சம்பளபட்டியல் நகல் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் –</u>**

இல்லை

(ஒப்பம் / திருமதி. S.சுமதி)
தொழிலாளர் நீதிபதி,
தொழிலாளர் நீதிமன்றம், சேலம்.